20th March 1961]

Vaigai Dam (water level)

*950 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் ஆண்டு டிசம்பர் மீ 10-ம் தேதி 104-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி, வைகை அணையில் 916 அடிக்கு தண்ணீர் வந்தால் குன்னூர் ஊருக்குள் தண்ணீர் நுழைவதை சர்க்கார் அறியுமா ?

(இ) தற்போது 915 அடியில் பாதி ஊருக்குள் நுழையும் தண்ணீரை வெளியேற்ற எற்றம் போட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(உ) உடனடியாக சுற்றிலும் நீர் சூழ்ந்த குன்னூரை காலி செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) The average ground level of the village is 918 feet. Therefore, the village will not be submerged if the water level in the Vaigai dam reaches 916 feet.

(இ) Yes, Sir. The baling is done in low pockets in the village which have already been acquired by Government.

(உ) Proposals are under consideration.

SRI N. R. THIAGARAJAN : அந்த ஊர் பொதுமக்கள், ஓட்டைக் கப்பலில் பிரயாணம் செய்வதைப் போன்று தான் வாழ்கிறார்கள், அங்கு சாக்கடைத் தண்ணீர் வெளியே போவதில்லை. அங்கிருந்து பாம்புகள் எல்லாம் ஊருக்குள் நுழைந்து வாசம் செய்கின்றன. அங்குள்ள மக்கள் மரண வாழ்க்கை நடத்துகிறார்கள். ஆகவே, அந்த ஊரை காலி செய்து நஷ்ட ஈடு கொடுத்து அவர்களை வெளியேற்றுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஓட்டைக் கப்பலில் போனால் மூழ்கித்தான் போவார்கள் ஆனால் இங்கு யாரும் மூழ்க வில்லை. தனியாக, நாலு பர்லாங்கில் வேறு இடம் பார்த்து "ரீஹாபிலிடேட்" செய்ய ஏற்பாடு நடக்கிறது. ஆர்.டி.ஓ.-வை வேண்டிய நடவடிக்கைகள். எடுக்கச் சொல்லப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

9-30 a.m.

III.—PRESENTATION OF PETITION.

MR. SPEAKER : I have received a petition from the hon. Member Sri K. Sattanatha Karayalar. The hon. Member Sri K. Sattanatha Karayalar wants to present the petition to the House. I have to invite the attention of the hon. Member to the rule which says as follows :

(1) The petition should be addressed to the Members of the Assembly;

(2) It should be dated and signed by the petitioner or petitioners;

(3) It should be in respectful and temperate language; and

(4) It must not propose expenditure of public moneys or the imposition of any charge on public revenues.

[Mr. Speaker] [20th March 1961

I hope the hon. Member will remember these four things. I give him permission to present the petition. If the hon. Member violates anyone of the four things listed above, then the petition becomes out of order.

Sri K. SATTANATHA KARAYALAR : I have deleted one portion which concerns with the increase in number of hospitals and which proposes expenditure of public money.

Mr. SPEAKER : That does not form part of the petition. All right. I hope the hon. Member knows the rules. I am afraid the hon. Member cannot make a long speech. There is no debate on this petition.

* Sri K. SATTANATHA KARAYALAR: கனம் சபாநாயகர் அவர்களே சென்னை சர்க்கார் மருத்துவ பொதுநலத்துறை தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 1,481 கையெழுத்துக்கள் கொண்ட இந்த மகஜரை இந்த சபை முன் சமர்ப்பிக்கிறேன். சர்க்கார் மருத்துவ மனைகளில் இன்று வேலை அதிகமாகிக் கொண்டே வருகிறது. நோயாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இதனால் பல கஷ்டங்கள் நேரிடுகிறது. ஆகவே, இதற்கு ஒரு பர்ஸென்ட் டேஜ் அடிப்படையில், ஒரு ரேஷியோ வைத்து கடைப்பிடிக்கக் கோருகிறோம். கடைநிலை ஊழியர்களுக்கு, பலதரப்பட்ட வேலை செய்து வருகிறவர்களுக்கு அவர்களின் திறமையைக் கருதி அதற்கேற்றபடி உத்தியோக உயர்வு அளிக்கவேண்டுமென்று கோருகிறோம். நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கக்கூடிய தொழிலாளர்களை, ஆறு மாதத்திற்கு அதிகமாக நிரந்தரம் செய்யப்படாமல் வைக்கக்கூடாது. ஆகவே, ஆறு மாதத்திற்கு மேல் ஆனால் அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கோருகிறோம். பத்து, பதினைந்து வருடங்கள் நிரந்தரம் செய்யாமல் இருப்பதைக் குறைக்க வேண்டும், அவர்களை உடனடியாக நிரந்தரம் செய்யவேண்டுமென்றும் கோருகிறோம். எட்டு மணி நேர வேலையும், ஏழு தினங்களுக்கு ஒரு தினம் விடுமுறையும் கொடுக்க வேண்டுமென்றும் கோருகிறோம். பின்னர், தொத்து நோய் விபத்துக்கள் உள்ள மெண்டல் ஆஸ்பத்திரி போன்றவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பிரத்தியேகமாக ஒரு அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்றும் கோரப்படுகிறது. கால்நடை மருத்துவ மனைகளுக்கும் இந்தக் கோரிக்கைகளை விஸ்தரிக்க கோருகிறோம். பொதுவாக மருத்துவ மனைகள் வளம் பெறச் செய்ய வேண்டிய வாய்ப்புகள், வசதிகள் செய்து கொடுக்க இந்த சங்கம் சர்க்காரோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள சர்க்காரை இந்த சபை மூலம் வேண்டிக்கொள்கிறேன். இந்த கோரிக்கைகளை உடனடியாக அங்கீகரிக்க வேண்டுகிறோம்.

(Sri K. Sattanatha Karayalar then presented the petition to the Secretary.)

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961–62—*cont.*

(1) DEMAND XVI—MEDICAL.

The Hon. Sri M. A. MANICKAVELU : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,51,96,400 under Demand XVI—Medical."